DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

DVC 24 /2023

Deposition of PW1 Cross examination Dt. 05.06.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | உத்ரா (எ) ஹரிணி | Caste | : | |
| Husband Name | : | சக்கரவர்த்தி | Calling | : | |
| Village | : | 18, அபிராமி நகர், மயிலாடுதுறை | Religion | : | |
| Taluk | : | | Age | : | 31/2024 |

(Respondent called absent)

**ம.சா.1 - 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்ன படித்துள்ளீர்கள் என்றால் எம்.டெக் படித்துள்ளேன். தற்போது எந்த கம்பெனியில் வேலை செய்து வருகிறீர்கள் என்றால் சென்னையில் உள்ள Aglisium Consulting என்ற கம்பெனியில் வேலை வெய்து வருகிறேன். அப்பா என்ன வேலை செய்து வருகிறார் என்றால் ஸ்பேர் பார்ட்ஸ் கடை வைத்துள்ளார். அம்மா வேலைக்கு செல்கிறாரா என்றால் இல்லை, என் உடன் பிறந்தவர்கள் இரண்டு தங்கை. உங்கள் திருமணம் இருவீட்டார் சம்மதத்தின்பேரில் நடந்தது என்றால் சரிதான். மாப்பிள்ளையை பற்றி தீர விசாரித்து தான் திருமணம் நடந்தது என்றால், கொரோனா சமயத்தில் பேசி பழகி தான் திருமணம் நடந்தது. திருமணத்தில் இரண்டு பேர்வீட்டாரும் பாதி செலவு செய்தார்கள் என்றால் இல்லை, எங்கள் வீட்டில் தான் எல்லாம் செய்தார்கள். மாப்பிள்ளை வீட்டிலும் பாதி பணம் கொடுத்தார்கள் என்றால் இல்லை. மாப்பிள்ளை வீட்டில் வரதட்சணையாக பணம், நகை செய்யவேண்டும் என்று கேட்டீர்களா என்றால் இல்லை. மாப்பிள்ளை வீட்டிலும் வரதட்சணையாக பணம், நகை செய்யவேண்டும் என்று கேட்டார்களா என்றால் கேட்டார்கள். எவ்வளவு பவுன் கேட்டார்கள் என்றால் 100 பவுன் நகை மற்றும் மாப்பிள்ளைக்கு 10 பவுன் நகை கேட்டார்கள். கேட்ட நகையை கொடுத்தீர்களா என்றால் கொடுத்தோம். மனுவில் சொல்லியுள்ளது போல் சீர்வரிசை, பாத்திரங்கள் தன்னிச்சையாக கொடுத்தீர்கள் என்றால் அவர்கள் கேட்டார்கள் கொடுத்தோம். எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்தவித நகையோ, சீர்வரிசை பொருட்களோ கேட்கவில்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் கணவர் TCS கம்பெனியில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். கம்பெனி விசயமாக வெளிநாடு சென்று வருவது உண்டு என்றால் இல்லை, U.S.ல் வேலை செய்தார், அதை தவிர வேறு எங்கும் சென்றதில்லை. திருமணம் முடிந்து கோயம்புத்தூரில் எத்தனை நாட்கள் தங்கி இருந்தீர்கள் என்றால் 5 நாட்கள் இருந்தோம்.

2) திருமணம் எங்கு நடந்தது என்றால் மயிலாடுதுறையில் நடந்தது. திருமணம் முடிந்து அடுத்த நாளே கோயம்புத்தூர் சென்றீர்களா என்றால் திருமணம் நடந்து ஒருவாரம் கழித்து சென்றோம். உங்கள் கணவருடைய நண்பர் ப்ரவீன் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் வேலை நிமித்தமாக வெளியூருக்கு செல்வது உண்டு என்றால் சரிதான். அவ்வாறு செல்லும்போது

இருவரும் ஒன்றாக தங்குவது உண்டு என்றால் சரிதான். திருமணம் 02.04.2021ல் நடந்தது என்றால் சரிதான். நகைகள் அனைத்தும் GRT நகைக் கடையில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ஆவணத்தில் 05.04.2021ம் தேதியன்று நகைகள் வாங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வாங்கிய நகைகளில் ஒரு சில நகைகள் மயிலாடுதுறையிலும், சென்னையிலும், கோயம்புத்தூரிலும் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அதில் சில நகைகள் திருமணத்திற்கு பின்னிட்டு வாங்கப்பட்டது என்றால் திருமணத்திற்கு முன்பே வாங்கப்பட்டது, பில் திருமணத்திற்கு பிறகு கொடுத்தார்கள். திருமணத்தின்போது தேர்தல் நடந்ததால் பில்களை திருமணத்திற்கு பின்னிட்டு வாங்கி கொண்டீர்கள் என்றால் சரிதான், திருமணம் முடிந்து கோயம்புத்தூர் செல்வதற்குள் சில நகைகள் வாங்கினோம். கோயம்புத்தூரில் 5 நாட்கள் தங்கியிருந்தபோது 2ம் எதிர்மனுதாரர் வளர்மதி உங்களை அடித்து துன்புறுத்தினாரா என்றால், அடிக்கவில்லை திட்டுவார்கள், ஒரு மாதிரி பேசுவார். மனுவில் உங்கள் கணவருக்கு ப்ரவீனுடன் ஹோமோ செக்ஸ் உள்ளதாக குறிப்பிட்டு உள்ளீர்கள் என்றால் சரிதான். அவர்கள் நேரடியாக ஹோமோ செக்ஸ் இருந்தது பற்றி தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் இருவரும் நண்பர்கள் வெளியூர் சென்றால் இருவரும் ஒரே அறையில் தங்குவதை வைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால், நான் U.S.ல் இருக்கும்போது நேரடியாக பார்த்தேன். அந்த உறவில் இருந்தார்கள் என்பதற்கான ஆவணங்கள் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. அந்த உறவு சம்பந்தமாக எந்த ஆவணமும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருமணம் நடைபெற்றதில் இருந்தே உங்களுக்கு உடல் ரீதியான பிரச்சினை இருந்தது என்றால் இல்லை. உடல் ரீதியான பிரச்சினை இருந்ததால் கணவருடன் உடலுறவு கொண்டிருக்கவில்லை என்றால் இல்லை. உங்களுக்கு பெனிடேரஷன் டிபிக்கல்ட்டி பிரச்சினை இருந்தது என்றால் இல்லை. இந்த பிரச்சினை சம்பந்தமாக 2ம் எதிர்மனுதாரர் உங்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால், அவர் அழைத்து செல்லவில்லை நாங்கள் இருவரும் சென்றோம். மருத்துவர் இருவரையும் பரிசோதனை செய்தார் என்றால் சரிதான். அதன் பிறகு தான் உங்களுக்கு இந்த பிரச்சினை இருந்தது தெரியவந்தது என்றால் இல்லை மருத்துவமனைக்கு வரசொன்னபோது அவர் காரணங்களை சொல்லி தட்டிக்கழித்தார். உங்களுக்கு பிரச்சினை இருப்பது தெரிந்து கொள்ள நீதிமன்றமே பரிசோதனை செய்ய சொன்னால் தெரிந்து விடும் என்றால் சரிதான். உங்கள் மாமியார் 13.02.2023ம் தேதியன்று மருத்துவர் சாரதா கிளினிக் பரிசோதனைக்கு அழைத்து சென்றால் என்றால் இல்லை. அன்றையதினம் மருத்துவமனைக்கு செல்லவில்லையா என்றால் எனது அம்மாவுடன் அந்த மருத்துவமனைக்கு சென்றோம், அவர் அழைத்து செல்லவில்லை. உங்களுடன் சக்ரவர்த்தி, அவருடைய அம்மா, உங்களுடைய அம்மாவுடன் மருத்துவமனைக்கு சென்றீர்கள் என்றால் அவர்கள் வரவில்லை. மருத்துவர் உங்களை பரிசோதனை செய்துவிட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளவேண்டுமென்று அறிவுறுத்தினார் என்றால் இல்லை. உங்கள் சம்பளம் எவ்வளவு என்றால், திருமணத்திற்கு பிறகு நான் வேலைக்கு செல்லவில்லை. திருமணத்திற்கு முன்பு உங்கள் சம்பளம் எவ்வளவு என்றால், ரூ.40,000 முதல் 45000 வரை வாங்கினேன். தற்போது சென்னையில் வேலை செய்து வருகிறீர்கள் என்றால் ஜனவரி மாதத்திற்கு பிறகு எனது தோழியின் கம்பெனினியில் யோகா நெட்வொர்க் வேலைக்கு சேர்ந்து

வீட்டில் இருந்து வேலை செய்து வருகிறேன். அந்த கம்பெனி உங்கள் தோழியுடன் சேர்ந்து ஆரம்பித்தது என்றால் எனது தோழிகள் சேர்ந்து ஆரம்பித்தார்கள் அதில் நான் வேலை செயது வருகிறேன். மனுவில் சொல்லியுள்ளதுபோல் 2ம் எதிர்மனுதாரர் எந்தவித துன்புறுத்தலோ, பணம் கேட்டு மிரட்டவோ, அடிக்கவோ எதுவும் செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட பொய்யான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. யோகா நெட்வொர்க் எங்குள்ளது என்றால் வீட்டில் இருந்து 3, 4 பேர் சேர்ந்து ஆரம்பித்துள்ளோம். எந்த ஏரியாவில் இருந்து வீட்டிலிருந்து வேலை செய்கிறீர்கள் என்றால் மயிலாடுதுறையில் இருந்து வேலை செய்கிறேன்.